**கவிதைப் போட்டி -6 (இரண்டாம் பரிசு)**

**நாளைய தலைமுறையின் இன்றைய கனவு (58)**

கனவு காணுங்கள் என்ற கலாவின் வார்த்தை
கனவுகளிலே போகும் இன்றைய தலைமுறையின் வாழ்க்கை
ஆம்... இவர்களின் கனவுகளில் வருவதோ
நவீன வாழ்க்கையும், மார்டன் மங்கைகளே
காலையில் எழுந்து
கைபேசியில் விழித்து
பேஸ்புக்கில் பதிவிட்டு
வாட்சப்பில் அரட்டையடித்து
அம்மாவிடம் அடிவாங்கி
அப்பாவிடம் திட்டுவாங்கி
விரைவாக உண்டுவிட்டு
விருட்டென்று வண்டியெடுத்து
நண்பர்களுடன் அரட்டையடித்து
போதைக்கு அடிமையாகி
மாலையில் வீடு வந்து
மலிவாய் உண்டுவிட்டு
மறுபடியும் தூங்கியே
தன் கலெக்டர் கனவையும்
கைபேசியிலே முடிக்கும்
இன்றைய தலைமுறை
விடியலை நோக்கி விழித்துக் கொண்டிருக்கிறது
அவனும் அவனது குடும்பமும்.....

*************